# ஊஞ்சல் ஆடுவோம்!

## சிறுவர் கவிதைகள்



மு. பொன்னம்பலம்

# ஊஞ்சல் ஆடுவோம்

(சிறுவர் கவிதைகள்)

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY.

மு. பொன்னம்பலம்

மூன்றாவது மனிதன் பதிப்பகம்

2023.

18418

Title :Unchal Aduvom

Author:Mu.Ponnambalam

Copy Right: Author

First Edition:June 2001

Published By: Moonravathu Manithen
Publication
37/14,Vauxhall Lane
Colombo-02
Tel: 01-302759
E-Mail: 3man@sltnet.lk

Publication No: 10

Pages: (VIII+54)

Price: 100/=

பெரியவர்களுக்கான இலக்கியத்தை விட சிறுவர்களுக்கென இலக்கியம் படைப்பது மிகவும் கடினமானதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும். எதையும் தம் அறிவின் சேகரிப்புக்குள் இழுத்துக் கொள்ளும் பருவத்தில் இயங்கும் சிறுவர்களுக்கு நாம் கொடுப்பது அவர்களுக்குப் பயன் தரக்கூடியதாகவும் அவர்கள் அறிவின் தளங்களில் விசாரணை அலைகளை எழுப்பி, இன்னும் அவர்கள் அடிமனங்களில் மண்டிக்கிடக்கும் கலையுணர்வுகளை கிளர்ந்தெழ வைப்பவையாகவும் இருக்கவேண்டும். நாம் இங்கே தரும் கவிதைகள் இப்போதுதான் பாத்தியை விட்டு முளைவிடும் குழந்தைகளுக்கென எழுதப்படும் ஒத்திசைப்பு பாடல்கள் NURSERY RHYMES வகையைச் சார்ந்தவையல்ல. பாத்தியை விட்டு மேலெழுந்து இன் காற்றில் தலையசைக்கும் தளிர்களுக்கானவையே இவை.

உலகின் எல்லா மொழிகளிலும் இத்தகைய கவிதைகளையும் பாடல்களையும் காணலாம். பெரியவர்களுக்கான நாட்டார் பாடல்களைப் போல் சிறுவர்களுக்கான இத்தகைய பாடல்களும் கிராம மக்களிடையே புழக்கத்தில் உள்ளதை நாம் காணலாம். சில களிப்பூட்டும் வேடிக்கைக் கவிதைகளாகவும் சில அறிவூட்டும் சிந்தனைக்குரிய கவிதைகளாகவும் இருப்பதைக் காணலாம்.

"மழை பொழியுது மத்தளங் கொட்டுது
வேலப்பன் "பெண்டிலை" வெள்ளங் கொண்டோடுது"

என்னும் இப்பாடலைப் படிக்கும் போது கிராமத்துச் சிறுவர்கள் "கெக்களம்" கொட்டிச் சிரிப்பர். இது களிப்பூட்டும் வகையைச் சார்ந்தது. இதில் வரும் "வேலப்பன் பெண்டில்" ஒரு வித விகடச் சித்திரத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்துவதே அதற்குக் காரணம்.

இரண்டாவது வகையைச் சார்ந்த சிந்தனைக்குரியதாக பின்வரும் கவிதையைக் காட்டலாம்:

"மழையே மழையே மெத்தப் பெய்
மண்ணில் வளங்கள் விளங்கப் பெய்"

இதில் வரும் வரிகள் மழையின் மேன்மையை விளங்க வைப்பனவாக உள்ளன. ஆனால் இது வெளிப்படையான "பிரச்சாரமாக" இல்லாமல் கவிதையோடு உள்ளிழைக்கப்பட்டவையாக இருப்பது இதன் சிறப்பு. ஆனால் வெளிப்படையான பிரச்சார ரீதியில் சிறுவர்களுக்கு புத்தி புகட்டுபவையாக அமைவன மூன்றாவது வகை. இதற்குச் சிறந்த உதாரணமாக பாரதியாரின் பாப்பா பாடல்களைக் காட்டலாம்.

ஓடி விளையாடு பாப்பா-நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா-ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

இது வெளிப்படையான போதனைகள் புகட்டும்வகையைச் சார்ந்தவையாக இருப்பினும் இதில் கையாளப்படும் சொற்கள், அதன் வெளிப்பாட்டுமுறை, அது யாருக்குக் கூறப்படுகிறது என்பவற்றின் பால்பட்டு அது மிகவும் சுவைதருவதாக உள்ளது. இத்தகைய போதனைகள் பெரியவர்களை நோக்கித் திருப்பப்படுமாயின், அவை மு.வரதராசனின் நாவல்கள் போல சோபை இழந்தவையாக மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இனி அடுத்ததாக வருவது, சிறியவர்களுக்காக எழுதப்பட்ட போதும் பெரியவர்களாலேயே அதிகம் விரும்பி சுவைக்கப்படும் வகையைச் சேர்ந்தவை. இதை நான்காவது வகை என்றே கூறவேண்டும். இந்த வகைக்கு ஆங்கிலத்தில் LEWIS CARROLL ஆல் எழுதப்பட்ட ALICE IN WOLNDERLAND என்ற கதையை உதாரணம் காட்டலாம். பாட்டும் உரையாடலும் கவிதையுமாக வரும் இப்படைப்பு, இதன் விநோதமான கற்பனையால் சிறுவர்களைக் கவர்ந்தாலும் இதில் பாவிக்கப்படும் மொழிநடை, உள் கருத்து புத்தி ஜீவிகள், மெய்யியலாளரர், மொழியியலாளர் ஆகிய பலரையும் வியக்கவைத்தவை. இவ்வாறே T.S. ELIOT கூட MACAVITY A MYSTERY CAT என்ற பெயரில் பூனையொன்றை உருவகித்து, இன்றைய அரசியல் சமூகம், அரச யந்திரம் ஆகியவற்றையெல்லாம் கேலி பண்ணும் விதத்தில் எழுதியுள்ளார். இதுவும் சிறுவர் கவிதைதான்.

இன்னொரு வகையையும் கூறித்தான் ஆகவேண்டும். அதாவது ஒருவித மர்மமும் சொற்களில் ஒருவகை "வன்முறை"யும் கலந்த சிறுவர் கவிதைகள். இதை ஐந்தாவது வகையென்றே கூற வேண்டும்.

இந்த வகைக் கவிதைகளுக்கு உதாரணமாக, இன்றைய ஆங்கில நாட்டின் ஆஸ்தானக் கவிஞராகக் கொள்ளப்படும் TED HUGESன் சிறுவர் கவிதைகளைக் காட்டலாம். EDGAR ALLENPOEவின் கவிதைகள், கதைகளில் காணப்படும் மர்மமும் பீதியும் இதில் வேறு விதத்தில் VIOLENT ஆக வெளிப்பட்டுவருவதைக் காணலாம். TED HUGES, மிருகங்களையும் பறவைகளையும் பற்றி எழுதும் போது அவற்றின் "மிருகத் தன்மையை","பறவைத் தன்மையை" வெளிப்படுத்துகின்ற முறைதான் தனியானது.

W. H. AUDEN எழுதிய NIGHT MAIL, JAMES HONEYMAN ஆகிய கவிதைகள் சிறுவர்களை நேரடியாகக் கவரக் கூடியவை. சிறுவர்களுக்கான முன்னுதாரணக் கவிதைகளாக இவை நிற்கின்றன.

இந்த வகையான சிறுவர் கவிதைகளின் பின்னணியில் பார்க்கும் போது தமிழில் வெளிவந்துள்ள சிறுவர் கவிதைகள் பெரியளவு சாதித்தவையாகச் சொல்ல முடியாது. குழந்தைகளுக்கான NURSERY வகைக் கவிதைகளும் சிறுவர் வகைக் கவிதைகளும் கலந்து நிற்கும் கவிதைகள் அனேகம் எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுக் கவிஞர் அழ வள்ளியப்பாவின் கவிதைகள் இவ்வகையைச் சார்ந்தவை. தேசிக விநாயகம் பிள்ளையின் இன்பியல்- துன்பியல் சார்ந்த மாலைக் காட்சிக் கவிதைகள் பெரியவர்களையும் சிறுவர்களையும் கவர்ந்திழுக்கும் நல்ல கவிதைகள் எனலாம். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "கத்தரித் தோட்டத்து வெருளி ","வீமா வீமா" ஆகியவையும் சிறுவர்களுக்குரிய நல்ல கவிதைகளே. பா.சத்திய சீலன் குழந்தைகளுக்குரிய ஆக்கங்களிலேயே தன் திறமையைக் காட்டியுள்ளார்.

"ஊஞ்சல் ஆடுவோம்" தொகுப்பில் உள்ள இக்கவிதைகள், களித்தல், கற்றல், வியத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ், நாம் மேலே குறிப்பிட்ட பல்வகைத் தன்மை கொண்ட சிறுவர் கவிதைகளை ஆங்காங்கே வெளிக்காட்டுபவையாகவும் அவற்றுக்கு மாறானவையாகவும் இருக்கின்றன எனலாம்."அகதிச் சிறுவர்" என்ற கவிதை ஏற்கனவே எஸ். ஜெயசங்கரால் அகதிகள் பற்றிய நாடகத்தில் பாவிக்கப்பட்டதும் குறிப்பிடற்குரியது. தாம் வாழும் உலகம், பிரபஞ்சம் என்று சிறுவர் சிந்தனை விரியவும்·பின்னர் தம்மை நோக்கி குவியவும் வைக்கும் நோக்கில் தரப்பட்ட கவிதைகளும் இதில் உள்ளன. அதன் வெற்றி

UDDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY

தோல்வி காலத்துக்குரியது. மெல்லிதான கவிதையுணர்வும் அழகும் பொருந்திய சிறுவர் கவிதைக்கு பின்வரும் ஆங்கில கவிதையைக் காட்டலாம்:

I WONDER WHY THE GRASS IS GREEN AND
WHY THE WIND IS NEVER SEEN

WHO TAUGHT THE BIRDS TO BUILD A NEST
AND TOLD THE TREES TO TAKE A REST

OR WHEN THE MOON IS NOT QUITE ROUND
WHERE CAN THE MISSING BIT BE FOUND.

80 களுக்கு முன்னரும் பின்னரும் எழுதப்பட்டுக் கிடந்த இக்கவிதைகள் நூலுருவில் மூன்றாவது மனிதன் வெளியீடாக வெளியிட்டு உதவ முன் வந்த என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய நண்பன் எம். பௌசர் எனது நன்றிக்குரியவர். இந் நூலை கணனிப் பதிவு செய்து உதவிய என் மகன் கிருபாகரனுக்கும் எனது நன்றி உரியது.

இந் நூலை உலக மெங்கும் பரந்து கிடக்கும் அகதிச் சிறுவர்களுக்கே அர்ப்பணிக்கிறேன்.

மு. பொன்னம்பலம்.
28.06.2001

# களித்தல்

# ஊஞ்சல் ஆடுவோம்

ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்
உன்னி உன்னி காலுதைத்து
வான் முகட்டை தொட்டுவர
ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்

காலம் என்னும் கயிறு கட்டி
காற்று வெளியை இருக்கையாக்கி
மேலெழுந்து மேலெழுந்து
விண் மீன்கள் கொய்து வர
ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்

நேற்று இன்று நாளை என்னும்
நிகழ்வுகளை மாலை ஆக்கி
வேற்றுலக மனிதரையும்
விளையாட நாம் அழைத்து
ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்

எம்மை விட இவ்வுலகில்
இருப்பவர் யார் பேர் மனிதர்?
உண்மையிது, புத்துலகின்
உதயம் எங்கள் கையில் ! என்று
ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்
உன்னி உன்னி காலுதைத்து
வான் முகட்டை தொட்டுவர
ஊஞ்சல் ஆடுவோம் வாரீர்
ஊஞ்சல் ஆடுவோம்.

மு.பொன்னம்பலம்

# பட்டம் விடுவோம்

காற்று நன்றாய் வீசுதே
பட்டம் கட்டி ஏற்றுவோம்
பார்க்க நன்றாய் இருக்குமே
பட்டம் கட்டி ஏற்றுவோம்.

பாம்புப் பட்டம் ஏற்றினால்
நெளிந்து வானில் பறக்குமே
கொக்குப் பட்டம் ஏற்றினால்
எழுந்து வெளியைக் குடையுமே.

சதுரப் பட்டம் கட்டுவோம்
தட்டுப் போல மிதக்குமே
அதிலே ஏறிக் குந்திட
ஆசையாக இருக்குதே.



விண்ணைக் கட்டி எழுப்புவோம்
வீணை விண்ணில் பாடுமே
கண்ணுக் கெட்டாத் தூரத்தில்
காற்றில் நடனம் ஆடுமே.

நூலை விட்டுக்கொடுத்திட
மேலே மேலே ஏறுதே
வால் அறுந்து போனதும்
வந்து நிலத்தில் குத்துதே

பட்டம் போல நாங்களும்
பறந்து செல்வோம் திக்கெல்லாம்
கட்டுப்பாடு என்னும் நூல்
கயிற்றைப்பற்றி ஏறுவோம்!

மு.பொன்னம்பலம்

## முற்றத்துப் பூக்கள்

முற்றத்திலே பூக்களெல்லாம்
பூத்திருக்குது - அதன்
மொட்டெடுத்து மாலை செய்வோம்
வாரும் தோழரே.


முல்லை மலர் பூத்திருக்கு
வெள்ளிகள் போலே - ஊசி
மல்லிகையும் காத்திருக்கு
அள்ளிச் செல்லுங்கள்.

செவ்வரத்தை தூங்கிறது
சேவற் கொண்டை போல் - அதை
கொய்தெடுத்து கோயில் கட்டி
முடியில் வைப்போமே.

வெள்ளை ரோஜா பூமலர்ந்து
கையைக் காட்டுது - அதன்
உள்ளே ஒரு வண்டிருந்து
குய்யோ என்குது

அண்டையில் ஓர் பட்டிமலர்
ஆசை ஊட்டுது - அதைக்
கொண்டையிலே சூடி ரதி
குதித்து வருகிறாள்.

வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
வாசம் பரப்புது - அவை
கண்ணே மணியே என்று எம்மைக்
கட்டித் தழுவுது.




# கலைகள் செய்வோம்

தாரணி வா
தமிழ் படி
ஆரணி வா
ஆங்கிலம் கல்

கதீஜா வா
கவிதைகள் தா
மரீனா வா
அறிவியல் செய்

இந்திரா வா
இன் இசை தா
நந்தினி வா
நடனமிடு

கலைகள் எல்லாம்
எங்கள் கையில்
உலகை அன்புக்
கலையால் வெல்வோம்!



## மழை விழா

மழையைக் கண்டு தவளைத் தாத்தா
மத்தளம் கொட்டிறார்
பழைய பாட்டை தினம் தினமும்
பாடிக் காட்டிறார்

தட்டான் பூச்சி வெளியில் வந்து
சிறகடிக்குது
தம்பளப்பூச்சி மண்ணில் ஊர்ந்து
பட்டு விரிக்குது

குட்டான் சோறு ஆக்கி ஆக்கி
அக்கா கொட்டிறாள்
குடிசை மண்ணில் கட்டிக் கட்டி
அண்ணன் இடிக்கிறான்

வேலியெல்லாம் கார்த்திகைப் பூ
விளக்கு வைக்குது
வயல்களெல்லாம் கொக்கெழுந்து
வெள்ளை கட்டுது

வீதியெல்லாம் வெள்ளம், காகம்
விழுந்து தோயுது
பாலர் விடும் வள்ளம் அதற்குள்
நனைந்து சாயுது

சூரியனார் குளிரைக் கண்டு
முகிலைப் போர்க்கிறார்
சோம்பலோடு இடைக்கிடை தன்
கண்ணைச் சிமிட்டிறார்

மாரியக்கா மின்னல் இடி
காற்றில் வருகிறாள்
மரங்கொடியை முழுகவைத்து
கரகம் ஆடுறாள்

(மழையைக் கண்டு....)



# கண்ணாடி வளையல்

வண்ண வண்ண வளையல் - மாமா
வாங்கித் தந்த வளையல்
கண்ணைப் பறிக்கும் வளையல் - நல்ல
கண்ணாடி வளையல்

கையை வீசி நடந்தால் - சும்மா
கலகலக்கும் வளையல்
வெய்யில் பட்டால் பளீரென்(று) எங்கும்
வெளிச்சம் ஏற்றும் வளையல்

வானவில்லைப் போன்று - ஏழு
வண்ணம் காட்டும் வளையல்
பூனை விழிகள் போல - இரவில்
பளிச்சிடும் நல்ல வளையல்

தோழியர்கள் கூடி - கையை
தொட்டுப் பார்க்க வைக்கும்
வேளைக் கொன்றாய் அடுக்கி - நான்
வீதி வலம் போவேன்.

## அம்பியின் நடை

அம்பி காலைத் தூக்கியே
அழகு நடை செய்கிறான்
கம்பி மேலே நடத்தல்போல்
காலை நடுங்க வைக்கிறான்

தக்குப் புக்குத் தக்கென
தாளம் போட்டு நடக்கிறான்
பக்கம் நிற்க்கும் அன்னையை
பார்த்துப் பார்த்து நடக்கிறான்

சிறிது தூரம் சென்றதும்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறான்
குதிரை மீது ஏறியே
குதித்து வந்த ராஜா போல்

மூன்று சில்லு வண்டியை
முன்னே தள்ளிச் செல்கிறான்
நான்கு பல்லு இடைக்கிடை
காட்டி தன்னுள் சிரிக்கிறான்.

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY.

# நான் அரசன்

ஆடும் மாடும் என்தோழர்
வாலை ஆட்டும் நாய் தோழன்
பாடும் பறவை என் சொந்தம்
பச்சை மரங்கள் என் சுற்றம்

வீடும் வெளியும் என் ஆட்சி
வீசும் காற்று என் ஊர்தி
மோதும் அலைகள் என் குதிரை
முகிலின் பொதியில் என் படுக்கை

அப்பா அம்மா என் கோட்டை
பள்ளித் தோழர் என் படைகள்
சும்மா இருப்பேன் சோறு வரும்
தூக்கிக் கொஞ்சும் நூறு கரம் !

மழையும் வெயிலும் என் தலையில் !
மண்ணும் தூசும் என் உடையில் !
இலையில் தூங்கும் வண்ணாத்தி
என்றால் எனக்கு பெரும் வேட்டை !

பிறையைப் பிடித்துக் குழலூத
பெரிய ஆசை எனக்குண்டு
இரவில் மின்னும் மின்மினியை
எடுத்து மாலை நான் தொடுப்பேன்

நான் தான் இந்த நாட்டரசன்
நாலும் மூன்றும் தெரிந்தவனாம் !
வானை முட்டும் கோட்டை கட்டி
வாழும் பெரிய நாட்டரசன்.

# செல்வி எந்தன் பிள்ளை

சின்னச் சின்னப் பிள்ளை
செல்வி எந்தன் பிள்ளை
கண்ணைக் கண்ணை வெட்டும்
காதை முறுக்கக் கத்தும்

முடுக்கி விட்டால் பாப்பா
முன்னும் பின்னும் ஆடும்
கழுத்தைக் கூடப் பின்னால்
அழகாய் திருப்பிக் காட்டும்

பட்டுச் சட்டை போட்டு
பொட்டு வைத்துப் பார்ப்பேன்
கட்டை மயிரைச் சீவி
கன்ன உச்சி இழுப்பேன்

மடியில் கிடத்தி கொஞ்சம்
பாலைக் குடிக்க வைப்பேன்
அடித்தால் கூட எந்தன்
பிள்ளை அழவே மாட்டான்

ஆராராரோ பாடி
அவளைத் தூங்க வைப்பேன்
நேரம் காலமின்றி
நல்லாய் தூங்கும் பாப்பா.

# தில்லை நடனம்

கடகடக்குது மேளம்
கைகள் கொட்டுது தாளம்
படமெடுக்குது நாகம்
பாம்பு நடனம், பாரும்

மகுடி கொட்டும் நாதம்
மத்தளத்தில் மோதும்
குறவன் குறத்தி ஆடும்
கூத்துக் கொள்ளுது, வேகம்

தலையில் செம்பை ஏந்தி
தாவி ஆடும் பாங்கி
கலக லக்குது சலங்கை
கரக நடனம், காணும்

கோபி யர்கள் கூடி
கொட்டுகின்றார் கும்பி
நாயகனாம் கண்ணன்
நாதம் நெளியும், நடுவில்

கடக டக்குது மேளம்
நந்தி கொட்டுது தாளம்
திமுதி முவென ஆடும்
தில்லை நடனம் பாரும்

# நானும் கோயில் போகிறேன்

டாண் டாண் என்று கேட்குது
கோயில் மணி அடிக்குது
தூம் தூம் என்று கேட்குது
கோயில் மேளம் கொட்டுது !

பீப்பீ என்று கேட்குது
பெரிய குழல் ஊதுது
பூம்பூம் சங்கு முழங்குது
சாமி வரப் போகுது !

அப்பா வேட்டி கட்டிறார்
அம்மா சேலை உடுக்கிறார்
அக்கா சட்டை அணிகிறாள்
அண்ணா சரிகை போர்க்கிறான் !

அம்மா என்னைக் கழுவியே
அழகுப் பொட்டு வைக்கிறாள்
பொம்மை சட்டை உடுக்கிறேன்
நானும் கோயில் போகிறேன் !

ADDAIVELY - NELLIADY
M. P. C. S, Ltd.
KARAVEDDY.

# அம்பியின் ஆசை

அம்மா சோறு சமைக்கிறார்
அன்பில் குழைத்து தருகிறார்
அப்பா நாளும் உழைக்கிறார்
எம்மை வாழ வைக்கிறார்

அண்ணா பள்ளி போகிறான்
நானும் கூடப் போகிறேன்
பென்னம் பெரிய எழுதெல்லாம்
எழுதி எழுதிப் பழகிறேன்

அக்கா கடவுள் படத்தின் முன்
கைகள் கூப்பி வணங்கிறாள்
கடவுள் என்றால் யாரென்று
கேட்டால் ஏனோ சிரிக்கிறாள்

நானும் பெரிதாய் வளருவேன்
நன்றாய் படித்து முடித்ததும்
கடவுளுக்கும் நானொரு
கடிதம் போட இருக்கிறேன்

## மனங்கவர் மலர்கள்

கூட்டுறவே நாட்டுயர்வு

மலர்கள் மனதைக் கவர்பவை
மணத்தை அள்ளிச் சொரிபவை !
பலரும் விரும்பும் பொருளவை
பாவையர்க்கும் பிடித்தவை !

இளஞ் சிவப்பு ஏற்றியே
இனிய ரோஜா மலர்ந்திடும் !
வளம் நிறைந்த, நாமகள்
வாழ மலரும் தாமரை !

முற்றம் எழில் பெற்றிட
முல்லை மெல்ல மலர்ந்திடும் !
சுற்றுப் புறம் மணத்திலே
சொக்க மலரும் தாழம் பூ !

நங்கையர் தம் கூந்தலில்
செருகி அழகு பார்த்திட,
பொங்கும் எழில் கூட்டியே
பூக்கும் வெள்ளை மல்லிகை !



களங்க மற்ற பாலரின்
கன்னம் ஒத்த மென்மையோ
இலங்கும் வெள்ளை மலரெல்லாம்
இறைவன் பாதம் நுகர்பவை !

# கற்றல்

# ஒற்றையடிப் பாதை

ஒற்றையடிப் பாதை
ஓடும் பாம்பு போல !
முத்து நிலாப் பொழியும்
ஒளியில் பாதை நெளியும்

நெளியும் பாதை மீதில்
நாங்கள் கூடிச் செல்வோம்
பொழியும் நிலவை அள்ளி
உண்டு துள்ளிச் செல்வோம் !

தென்னந் தோப்பின் ஊடே
பாதை சென்று மறையும்
புள்ளி நாகம் போல
பின்னர் மெல்ல நெளியும்

ஒற்றையடிப் பாதை
அத்தை வீட்டுக் கோடும்
முத்து நிலா வோடு
நாங்கள் கூடிச் செல்வோம்.



மு.பொன்னம்பலம்

# அருளைத்தா

பூமா பூமா பூவைப் பார்
பூவைக் குடையும் வண்டைப்பார்
பாமா பாமா கனியைப்பார்
கனியைக் கோதும் கிளியைப்பார்

பசுவே பசுவே கன்றைப்பார்
பாலை ஏந்தும் செம்பைப்பார்
எருதே எருதே வயலைப்பார்
எலிகள் அரியும் கதிரைப்பார்

கோழி கோழி குஞ்சைப்பார்
குஞ்சைத் தூக்கும் பருந்தைப்பார்
தோழி தோழி வழியைப்பார்
வழியில் நெளியும் பாம்பைப்பார்

நிலமே நிலமே வரம்பைப்பார்
நிலத்தில் தெரியும் பிரிவைப்பார்
அரசே அரசே வயிற்றைப்பார்
பசியைப் போக்கும் வழியைப்பார்

மனிதா மனிதா மனதைப்பார்
மண்டும் இருளைப் போக்கப்பார்
குருவே குருவே எம்மைப்பார்
குழந்தை எமக்குள் அருளைத்தா.

# நன்மை செய்ய முந்து

ஒன்றும் ஒன்றும் இரண்டு
எமக்குள் இறைவன் உண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
அன்பை நெஞ்சில் ஊன்று
மூன்றும் ஒன்றும் நான்கு
நல்லதையுள் வாங்கு
நான்கும் ஒன்றும் ஐந்து
நன்மை செய்ய முந்து !

ADDAIVELY - NELLIA
M. P. C. S. Ltd.
KARAVEDDY

MACCAYELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY

# முற்றத்து வாழை

முற்றத்திலே கதலி வாழை முளைத்து நிற்குது - அதன்
சிற்றுடலைச் சுற்றியெழில் சிறகடிக்குது
புற்றைவிட்டு நாகமொன்று புறப்படுதல் போல் - அதன்
பக்கத்திலே குட்டியொன்று தலையை நீட்டுது !

குருத்தை வீசிக் கன்னிவாழை சிரித்து நிற்குது - தோகை
விரித்த மஞ்ஞை போல் இலையைப் பரப்பிவைக்குது
கருத்தையுடன் கௌவியெம்மைக் கிறங்க வைக்குது - இளங்
கன்னிபோல மென்னுடலை தாங்கி நிற்குது !

வளர்ந்து வாழை சிறுதுநாளில் குலையும் விட்டது - பல
குழந்தைகளும் ஒன்றோடொன்று கூடிநின்றன !
மலர்ந்த பூவும் பிஞ்சுமாக மெள்ளச் சாய்ந்து - குலை
முதிர்ந்து போது தன்னுயிரை மாய்த்துக்கொண்டது

துண்டமாகி அன்றொரு நாள் மண்ணில் துவண்டது - அதன்
கண்டனைய கனியைப்பலர் உண்டுகளித்தனர்
நின்ற இடம் இன்றுவெளி யாகிப் போனது - நல்ல
தொண்டு செய்வோர் வாழ்வதெல்லாம் சொற்ப நாளன்றோ !

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd
KARAVEDDY

# ஒற்றைப் பனை

ஒற்றைப் பனை ஒன்று
ஓலம் வைக்கும் நின்று
வெட்ட வெளிக் காற்றில்
ஒற்றைப் பனை ஒன்று !

அப்பா அம்மா அற்ற
அனாதைப் பிள்ளை போல
ஒற்றைப் பனை ஒன்று
ஓலம் வைக்கும் நின்று !

ஒற்றைக் காலில் நின்று
ஒருவர் செய்யும் தவம் போல்
வெட்ட வெளியைத் துழாவி
என்ன வரமோ கேட்கும்?

விடுதலை பெற்றெவரும்
வாழ வரமே கேட்கும்
வறுமை நீங்கி மக்கள்
வாழ வரமே கேட்கும்

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY.

பஞ்சம் உற்ற போது
பழமும் பனாட்டும் வழங்கும்
என்றும் நிமிர்வு எமக்குள்
ஏற்றி உரமே சேர்க்கும்

எங்கள் அன்னைத் தமிழின்
இயற்கை சின்னம் இதுவே
அன்று தொட்டு வறுமை
அகற்றும் தெய்வத் தருவே.

மு.பொன்னம்பலம்

# புதிய ஞானக் குழந்தைகள்

புதிய ஞானக் குழந்தைகளே
இப்பால் வந்து அமருங்கோ !
கேள்வி கேட்போம் எமை வளர்ப்போம்
கிளரும் அறிவுத் தீ வளர்ப்போம் !

கமலி எங்கே போகின்றாய் ?
"கோயிலுக்குப் போகின்றேன்"
கோயிலுக்கேன் போகின்றாய்?
"சாமி கும்பிடப் போகின்றேன்"

நீயே கோயில், என் கமலி
நெஞ்சே இறைவன் வாழுமிடம் !
ஓய்தல் இன்றி அதை வணங்கு
உனக்குள் இறைவன் இனிப்பானே !

சாந்தி என்ன சோர்ந்துள்ளாய்?
"நானா? இன்று சனி விரதம்"
சனிக்கேன் விரதம் பிடிக்கின்றாய்?
"தொல்லை நீங்கிச் சுகம் பெறவே"

தொல்லை நீங்கிச் சுகம் பெறவா?
எமக்குள் இருக்கும் சுயநலத்தை
கிள்ளி எறிய நோன்பிருப்போம்
கிளரும் இன்பம், கலி வீழும் !

குமரா என்ன செய்கின்றாய்?
"கோயில் கட்டும் திருப்பணிக்கு
காசு தண்டிக் கொடுக்கிறேன் !
கடவுள் பணியும் செய்கிறேன்"

ஏழை உருவில் நடமாடி
இறைவன் எம்முன் திரிகையிலே
கோயில் எதற்கு? ஏழைகளை !
வாழவை ! அது திருப்பணியாம் !

புதிய ஞானக் குழந்தைகளே
இப்பால் வந்து அமருங்கோ !
புதிய ஞான யுகம் வளர்ப்போம்
பொய்மை நீங்கி, மெய் எழவே.

# தாத்தாவும் நாங்களும்

தாத்தா ஒருவர் வருகிறார்
தத்தித் தத்தி வருகிறார்
பொல்லை நழுவ விடுகிறர்
பாவம் மண்ணில் புரள்கிறார்

எழுந்து நிற்கப் பார்க்கிறார்
திரும்பத் திரும்ப விழுகிறார்
நாங்கள் பாய்ந்து போகிறோம்
தூக்கி அவரைப் பிடிக்கிறோம் !

தாத்தா எழுந்து நிற்கிறார்
பொக்கை வாயால் சிரிக்கிறார்
ஊன்று கோலைக் கொடுக்கிறோம்
மூன்று காலால் போகிறார்

தாத்தா நடந்து போகிறார்
தத்தித் தத்தி போகிறார்
பார்த்துப் போங்கள் தாத்தாவே
பிறகும் விழுந்தால் ஆபத்து !

# அகதிச் சிறுவர்

வான மெங்கும் வெள்ளிப் பூக்கள்
அள்ளிச் சூட ஆளில்லை
பூமி எங்கும் அகதிச் சிறுவர்
அள்ளி அணைக்க ஆளில்லை

வெளியில் எங்கும் கிளிகள் பாடும்
கேட்டுச் சுவைக்க ஆளில்லை
வழியில் தெருவில் மழலைப் பேச்சு
கேட்டு மகிழ ஆளில்லை !

கடலில் துள்ளும் மீன்கள் கூட்டம்
கண்டு களிக்க ஆளில்லை
படகில் அலையும் அகதிச் சிறுவர்
கரையும் சேர வழியில்லை !

உலகம் மெங்கும் உயர்ந்த நீதி
போதனைக்கு குறைவில்லை !
இரவும் பகலும் வந்து போகும்
அகதிச் சிறுவர்க் கொளியில்லை !

# ஒன்றுபட்டால்

குருவி ஒன்று கூடுகட்டி
முட்டை யிட்டது
அருகில் ஒரு பாம்பு புற்றில்
பார்த்திருந்தது

ஆடிப்பாடி நாளும் குருவி
அடையும் காத்தது
பாம்பு அதன் முட்டை யுண்ணச்
சமயம் பார்த்தது

குருவி ஒருநாள் உணவு தேடி
வெளியே சென்றது
அரவு மெல்ல குருவிக்கூட்டுள்
நுழையப் போனது

காகம் ஒன்று பார்த்தே இதைக்
"காகா" என்றது
கிளிகள் இதைக் கேட்டெழுந்து
"கீகீ" என்றன

மைனாக் கூட்டம் "ஆபத்" தென்று
மொய்த்துக் கத்தின
கரிக் குருவி, காடை, கோட்டான்
திரண் டெழுந்தன !

வட்டம் இட்ட பருந்தும் கீழே
விரைந்து வந்து தன்
துட்ட குணத்தை விட்டிவைக்குத்
துணையாய் நின்றது

அத்தனையும் சேர்ந்து பாம்பைக்
கொத்தத் தொடங்கின
"ஐயோ" என்று பாம்பு கீழே
செத்து விழுந்தது !

ஒன்று கூடி பறவையினம்
பகையை வென்றது
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"
என்று பாடின.

# அமைதிப் புறாவே வா

அமைதிப் புறாவே விரைந்து வா - எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாட வா
அடிமை விலங்கை அறுக்க வா - நாம்
ஆனந்தமாய் கூத்தாட வா

சிறுவர் நாங்கள் சிரிக்க வா - எங்கள்
தேசம் ஓங்கித் தழைக்க வா
வறுமை நோயை விரட்ட வா - சம
தர்மம் வெல்ல பறந்து வா

கொடுமை செய்வோர் அழிய வா - கொலை
கொள்ளை யாவும் தொலைய வா
விடியல் போலச் சிலிர்த்து வா - கல்வி
வீரம் செல்வம் விளங்க வா

அமைதிப் புறாவே விரைந்து வா - எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாட வா
கடவுள் போலச் சிறுவர்கள் - ஒரு
களங்கம் இன்றிச் சிறக்க வா.



## கல்விக் கண்

பாதையைத் தடவியே திரிவார் - கண்
பார்வையில்லாத குருடர் - தாம்
போகும் வழியினை அறியார் - கல்வி
புகட்டப்படாத சிறுவர்

உடலினில் வலிமை இருந்தும் - கல்வி
ஊட்டப் படாதவர் வாழ்க்கை
புயலில் அகப்பட்ட துரும்பாய் - நோக்கம்
இன்றிச் சிதறுண்டு போகும்.

குருடனுக்(கு) ஊன்று கோல் போலே - கல்வி
உள்ளவர்(கு) உள்ளொளி துணையே
கருடனின் பார்வையைப் போலே - கல்வி
காட்டிடும் தூரத்துப்பார்வை.

ஊனக் கண் இல்லாத போதும் - கல்வி
உள்ளவர் நல்வழி செல்வார்
ஞானக் கண்ணா மன்றோ கல்வி - அதை
நத்திட நத்திட நல்வழி விரியும்.



# பார்த்தல்

பகலைப் பார்
ஒளியழகு
இரவைப் பார்
இருள் அழகு

கடலைப் பார்
நீர் அழகு
திடலைப் பார்
வெளி அழகு

தாயைப் பார்
அன்பழகு
பிதாவைப் பார்
செயல் அழகு

உன்னைப் பார்
உடல் அழகு
உனக்குள் பார்
இறையழகு



# மழையும் வெய்யிலும்

பூமழை பெய்யுது வானம் - வெய்யில்
புகுந்து சிரிக்குது தானும்
கோமகள் வருகின்ற போது - பட்டுக்
குடையைப் பிடிப்பவள் போல

நூல் மழை பெய்யுது வானம் - வெய்யில்
நுழைந்து சிரிக்குது தானும்
பால்நிறச் சேலையின் மேலே - சரிகை
படர்ந்து கிடப்பதைப் போலே

கல்மழை பெய்யுது வானம் - வெய்யில்
கலந்து சிரிக்குது தானும்
தொல்லைகள் சூழ்கின்ற போதும் - அன்பைச்
சுரக்கின்ற பெரியவர் போலே !

# வியத்தல்

# கும்மிருட்டு வேளை

கும்மிருட்டு வேளை எங்கோ
நாய் குரைத்துக் கேட்குது !
அம்புலியும் இல்லை, வானில்
ஆயிரம் கண் மின்னுது !

சந்தியில் ஓர் ஆலமரம்
இருளை அடை காக்குது
அங்கெரியும் விளக்கணைத்து
வயிரவரும் தூங்கிறார் !

குச்சொழுங்கை வாயனைத்தும்
இருள் அடைத்துப் பொத்துது
முக்கியவை முனகுதல் போல்
ஆந்தை அங்கே கத்துது !

இருளை வெட்டி வானிருந்து
எரிகல் ஒன்று விழுகுது
அரவு போல அது நெளிந்து
வடலி மேல சிதறுது !

இடை கிடையோர் வண்டிரைந்து
இரவின் நெஞ்சைக் குடையுது
குடையுமதன் குழியிருந்தோ
கரிய இருள் பெருகுது?

பெருகிவரும் இருள் சிறகுள்
பேருலகம் துயிலுது
துயுலுகின்ற போதும் ஏதோ
தொடர்ந்து வெளியில் ஆடுது?

கும்மிருட்டு கும்மிருட்டு
வெளியில் என்ன ஆடுது
அம்புலியும் இல்லை வெளியில்
ஆண்டவன் கண், ஆடுது !

# எங்கள் கிராமத்துக் காலை

வெண்ணெய்த் திரள் போல்
விடியும் மம்மற் காலை
எங்கள் கிராமம் விழிக்கும்
இயக்கம் மெல்லக் கொள்ளும் !

சேவல் கூவும் ஓசை
ஓய்தல் இன்றிக் கேட்கும்
கோவில் மணியும் அடிக்கும்
கோபுரங்கள் உயிர்க்கும்

வண்டி சலங்கை கிலுங்கும்
வாளி கிணற்றில் வீழ்ந்து
தொம் மென் றோசை எழுப்பும்
தும்மல், இருமல் கேட்கும் !

காகம் கொப்பில் இருந்து
கரையும், கதிரோன் எழுவான் !
மேகம் மினுக்கி, வெய்யில்
மெல்லப் பூமி இறங்கும்.

பூக்கள் ஆயும் கைகள்
பூசனைகள் செய்யும்
ஈக்கள் போல ஆட்கள்
இரையத் தொடங்கும் வேளை.


# வானம் ஒரு வயல்

பகல் விடிந்தது
பைங்கரு வானத்தில்
நகை யவிழ்ந்திட
நன்செயு முழவனாம்

கதிர் எழுந்தனன்
கைகளை வீசியே
விதை விதைத்தனன்
வீடுபோய்ச் சேர்ந்தனன்.

பகல் மடிந்தது
பகலவன் தூவிய
விதை முளைத்தது
வெள்ளியாய் விடியுமுன்

அவன் பயிர்களை
அறுவடை செய்தனன்
இவை தினந்தோறும்
இனிது நடப்பவை.



# மலையின் மகள்

வெள்ளியை உருக்கி வார்த்து
விட்டது போலத் துள்ளி
மெல்லிசை எழுப்பி யோடும்
மலைமகள் அருவி யன்றோ !

துள்ளியே செல்லும் பின்பு,
சோர்ந்து போய்த் தவழும், வழியில்
அள்ளியே மலரைச் சூடி
அக மகிழ்ந்தோடும் அருவி !

தெள்ளிய தனது நீரால்
தீர்த்திடும் தாகம், வயல்கள்
நெல்மணி உருக்க உழவை
நேர்த்தியாய் வளர்க்கும் அருவி !

தொல்லைசெய் தீமை யாவும்
தொலைத்திடும் இறைவன் போற்றான்
செல்திசை யெல்லாம் அழுக்கை
கழுவியே ஓடும் அருவி !

மாரிவந் துற்றால் தனது
மென்மையைப் போக்கி, கற்பால்
வீறுற்(று) அன்(று) எழுந்த
வெஞ்சினக் கண்ணகி போல்

தலைவிரி கோல மாயித்
தரையெல்லாம் நீர் நிறைந்து
உலகினை அழிப்பது போல்
ஓ வெனப் பாயும் அருவி !




# விடிவிளக்கு

மனைச் சோலையில் இருளில்
மலரும் ஒளி விளக்கே
உனைப் பூவெனச் சூடி
உவகை பெறும் இரவே !

கூத்துப் பயில் பெண்ணாய்
குதிப்பாய் இளங்காற்றில்
கோத்துப் புகைமாலை
கொடுப்பாய் அடுக்கடுக்காய்

பகலின் ஒரு துளியாய்
படர்வாய் இருளுள்ளே
அழகு மனை நுதலில்
அமரும் ஒளிப் பொட்டோ?

ஓடியும் வரை கதிராம்
உந்தன் இமை கொட்டி
விடியும் வரை வாழும்
விளக்கே விடி விளக்கே !



# முற்றம்

ஓலையால் சமைந்த குடிசை
ஒன்றது, முன்னே அழகுப்
பாலைபோல் சிறிய முற்றம்
பசுந்தரை என்ன நடுவே
நாலைந்து பூஞ் செடிகள்,
நனைந்தவோர் கந்தல் தெற்கு
வேலியின் முள்ளில் தொங்கி
வெடவெடத் தாடும் காற்றில் !

இரண்டொரு காக்கை முற்றம்
இறங்கவா விடவா என்றே
முருங்கையில் இருந்து தங்கள்
மூளையைக் குழப்பிக் கொள்ளும் !
வெருண்டு கீா் என்னும், வானில்
வலம்வரும் பருந்தால் கோழி !
சுருண்டொரு நாய் கிடந்து
சுற்றித்தன் வாலைத் தின்னும் !

சிற்றடி பெயர்த்து மழலைச்
செல்வ மொன்றங்கு மிங்கும்
தத்திடும், மண்ணை வாரித்
தலையிலே கொட்டும், ஆட்டுக்
குட்டியொன் றங்கு வந்து
குடத்துள்ளே தலையை விட்டு
மொத்திடும் நிலத்தில், சூய், சூய்
என்றதைத் தொடரும் மொழிகள்

கிளம்பியே காற் றெழுந்து
கிண்டிடும் மண்ணை தூசு
நுழைந்தால் வீட்ருள் தும்மல்
நோந்திடும் அச்சு அச்சு !
குழந்தைகள் பள்ளி விட்டுக்
குதித்தங்கு வருதல் கேட்டு
ஒழுங்கைபோம் மட்டும் விழியை
ஓட்டியே நிற்கும் அன்னை !

# பேர் மனிதர்

பொது நூலகம்

பூமி எங்கள் வீடு
வானம் அதன் கூரை
சூரியனும் நிலவும்
எங்கள் வீட்டின் ஜன்னல்

இரவு எங்கள் அன்னை
பகலோ எங்கள் தந்தை
இருவர் அன்பின் அணைப்பில்
எங்கள் வாழ்க்கை ஓடும்

காற்றே எங்கள் பேச்சு
கடல்தான் நீச்சல் கேணி
நெருப்பே ஜீவ இருப்பு
நெஞ்சில் இறையின் இருப்பு

பேர் மனிதர் நாங்கள்
பால் வழி எம் பாதை
அண்டம் யாவும் சொந்தம்
பந்தம் எதிலும் இல்லை.

# செல்லப்பிள்ளை பூமியாம்

பந்து போல பூமியாம்
பம்பரம் போல் சுற்றுதாம்
சூரியனாம் அப்பாவை
சுற்றி சுற்றி வருகுதாம் !

அண்ணா சனி வியாழனும்
அவர்கள் பின்னால் செவ்வாயும்
தங்கை திங்கள், வெள்ளியும்
தம்பி புதன் எல்லாரும்

சூரியனாம் அப்பாவைச்
சுற்றி சுற்றி வருகிறார் !
பூமியோடு அவர்களும்
பம்பரம் போல் சுற்றிறார்

பிள்ளைகளில் பூமிதான்
சூரியனின் "செல்ல" மாம்
செல்லப்பிள்ளை என்பதால்
செல்வ மெல்லாம் பெற்றதாம்


மற்றவைகள் பார்த்திதை
மனம் வெதும்பி வரண்டதாம்
பந்து போல பூமியோ
சந்தோசமாய்ச் சுற்றுதாம் !

# விடுதலைக் குருவி

விடுதலை என்னுமோர் குருவி - எங்கள்
வீட்டினில் வந்திசை பாடுதே தம்பி
பிடியடா மெல்லவே சென்று - இன்பம்
பெருகிடப் பெருகிட வைத்ததைக் காப்போம் !

அன்புப் பழங்களைக் கொடுப்போம் - அது
ஆசையுடன் கதை பேசியே உண்ணும்
பண்பையும் சேர்த்துப் படைத்தால் - அது
பாடி எமைச் சுற்றி ஆடியே நிற்க்கும் !

கைக்குள்ளே நிற்காது தம்பி - எந்தக்
கண்ணி வலையிலும் சிக்காது தம்பி
பொய்யைக் கிழித்தெழும் தம்பி - வான்
பூமி அனைத்திற்கும் ஒளியது தம்பி !



கல்லால் அடிக்காதே தம்பி - வாள்
கத்தி இரும்பையும் அஞ்சாது எதிர்க்கும்
வில்லுக்கு வீழாது தம்பி - வெடி
வைத்தாலும் சாகாது மேலெழும் தம்பி !

கூட்டுக்குள் வாழா (து) இக்குருவி - அச்சம்
கொண்டவரோடும் திரியாது தம்பி
பூட்டில்லா நெஞ்சிதன் கூடு - வீரப்
பொங்கல் இடுவார் முன் வந்திசை பாடும் !

விடுதலை என்னுமோர் குருவி - எங்கள்
வீட்டினில் வந்திசை பாடுதே தம்பி
தொழுதி டுவோம், அது தெய்வம் - நித்தம்
தொழுதிடத் தொழுதிட அது நம்முள் வளரும் !

# நிலவும் நானும்

அன்று மாலை பௌர்ணமிக் காலம்
கிழக்கு வானில் ஓர் வெளிச்சம் தெரிந்தது.
"தோடம்பழத்தின் சுளைபோல்", அங்கே
நிலவின் பாதி எழுவது தெரிந்தது.
வேறு அலுவலாய் விரைந்த என்கால்கள்
நின்றன அங்கே, எங்கும் நிசப்தம்
நிலவின் வரவையே உலகம் அனைத்தும்
உற்றுநோக்குதல் போன்றவோர் அமைதி
பாதி நிலவு, சிறுநொடிப் பொழுதில்
பழுத்தவோர் பெரிய பனம்பழம் போன்று
பொங்கி எழுந்து பனைகளுக்கிடையே
தொங்கக் கண்டேன் !
எங்கும் அமைதி என்னுடல் சிலிர்த்தது
காற்று மட்டும் இடைக்கிடை எழுந்து
கதைக்கும் சத்தம் கேட்டது, தென்னங்
கீற்றில் நிலவொளி வீழுந்து வழிந்தது.


உலகம் அனைத்தும் மஞ்சள் பட்டுப்
போர்த்ததுபோல நிலவில் குளித்தது.
இரவில் எங்கோ தொலைவில் இருந்து
பறவை ஒன்று பாடுதல் கேட்டது.
வான வெளியில் வௌவால் இரண்டு
நீந்துதல் போல மெல்லப் பறந்தன.
நானும் மெல்ல நடக்கத் தொடங்கினேன்.
எனக்கு முன்னால் ஒற்றையடிப்பாதை
வெள்ளி நாடாப்போல் வளைந்து நீண்டது.
தனியே நடந்தேன், இனிய நிலவு

எனக்குப் பின்னால்
குடையைப் பிடித்து நடந்து வந்தது
வீட்டுப் படலையைத் திறந்தபோது
மீண்டும் நிலவைப் பார்த்தேன், அங்கே
செம்மஞ்சள் பழம்போல் தெரிந்த நிலவு
வெள்ளித் தகடென மின்னிற்று,
அப்போது
அதற்குள் இருந்த ஔவைக் கிழவி
என்னைப் பார்த்து கையை அசைத்து
விடை கொடுப்பது எனக்கு தெரிந்தது.



ADDAIVELY - NELLIADY
M. P. C. S, Ltd.
KARAVEDDY.
ADDAIVELY - NE
M. P. C. S,
KARAVEDDY

# பறக்கும் தட்டு வருகுது




பறக்கும் தட்டு வானிலே
பறந்து நிலத்தில் இறங்குதாம்
இறக்கை எதுவும் இல்லையாம்
இந்த பறக்கும் வண்டிக்கு

பளபளப்பாய் இருக்குமாம்
பார்ப்போர் கண்ணைப் பறிக்குமாம்
விழித்த கண்ணை வெட்டுமுன்
வரைந்து எழுந்து மறையுதாம்

வட்டமான பொருளிதாம்
ஏறி அதில் வருவோர் யார்?
அங்கு நாங்கள் போவோமா?
அவரைக் கண்டு கதைப்போமா?

சந்திரனில் மனிதரோ?
செவ்வாய்க் கிரக மக்களோ?
எங்கிருந்து வருகிறார்?
இந்த விந்தை மனிதரோ?

எங்கள் கிரகம் எதிலுமே
மனிதர் இல்லை என்கிறார்
அப்போ பறக்கும் தட்டிலே
அலையும் மாயக் குள்ளர் யார்?



சூரியனுக்(கும்) அப்பாலே
தொலைவிலுள்ள ஊர்களில்
யாரும் மனிதர் இருப்பாரோ?
அவர்தான் இந்த ஆட்களோ?

# அம்புலியில் பூபாலன்

பூபாலா பூபாலா எங்கே போனாய்?
பூமிக்கு அப்பாலே நானும் போனேன்.

பூமிக்கு அப்பாலே எங்கே போனாய்?
அம்புலியைப் பார்த்து வர நானும் போனேன்.

அம்புலியைப் பார்த்து வர எப்படிப் போனாய்?
அமெரிக்கா செய்துவிடும் கப்பலில் போனேன்.

அம்புலியில் என்னென்ன பார்த்து வந்தாய்?
பார்ப்பதற்க்கு அங்கொன்றும் இல்லை, ஔவைப்
பாட்டியும் நான் போக ஒளிந்து கொண்டாள்.

பாட்டி என்று நம்முன்னோர் எதனைச் சொன்னார்?
அம்புலியின் பாறைகளைக் கண்டு சொன்னார்.

அம்புலியில் நீ என்ன அறிந்து வந்தாய்?
அந்தரத்தில் நான் நின்றேன் கொஞ்ச நேரம்
காற்றில்லை, நீரில்லை, உணவுமில்லை
கதைப்பதற்க்கு ஆள்கூட அங்கே இல்லை !

ஆளில்லா ஊருக்கா இத்தனை போட்டி?
ஆளிருக்கும் ஊர்களுக்கு உதவி செய்வோம்.



# வானில் ஒரு நாடகம்

அந்தி வான வெளியிலே
வந்து மேகம் கூடுது
மேக மெல்லாம் கூடியே
நாடகங்கள் போடுது

குதிரை போல ஒரு முகில்
குதித்து வந்து நிற்குது
கரடி போல இன்னொன்று
கையை விரிக்கப் பார்க்குது


குதிரை கொஞ்ச நேரத்தில்
குடையைப் போல விரியுது
கரடி கொஞ்ச நேரத்தில்
கப்பல் போல மாறுது

குடை பிடித்து அங்கேயோர்
குட்டிப் பாப்பா போலொரு
முகில் நடந்து வருகுது
அதற்குள் குடையும் கரையுதே !

கப்பல் கக்கும் புகையைப்போல்
இப்போ குடையும் நெளியுது
தொப்பி போட்ட மனிதன் போல்
கப்பல் இப்போ சுருங்குது

மாடு போல ஒரு முகில்
மலையைப் போல ஒரு முகில்
வீடு, மரம், ஆடு போல்
வேடம் போடும் முகில்களாம் !

அந்தி வானில் நாடகம்
வந்து மேகம் ஆடுது
எங்கள் நினைவுக் கேற்பவே
இனிய கோலம் போடுது !



# எங்கள் வீட்டு வெள்ளைக் கோழி

எங்கள் வீட்டு வெள்ளைக் கோழி
பத்து முட்டை இட்டது
பத்து முட்டை இட்ட கோழி
எட்டுக் குஞ்சு பொரித்தது

எட்டுக் குஞ்சைக் கூட்டிக்கொண்டு
எங்கும் அது திரிந்தது
அங்கே ஒரு பருந்திருந்து
இரண்டு குஞ்சை தூக்கிற்று

இரண்டு குஞ்சைத் தூக்கக் கோழி
எழுந்து மேலே பாய்ந்தது
எழுந்து கோழி பாய உடன்
பருந்து குஞ்சைப் போட்டது


பருந்து போட்ட குஞ்(சு) இரண்டும்
விரைந்து ஓடிப் பதுங்கின
வெற்றி பெற்ற வீரக் கோழி
கொக்கரித்து நிமிர்ந்தது.



# விந்தை

வெள்ளைப் பூவே, வெள்ளைப் பூவே
எப்படி விரிகிறாய்?
என்னைப் போல நீயும் சிரிக்க
எப்படிக் கற்றாயோ?

சின்னக் குருவி, சின்னக் குருவி
எப்படிப் பறக்கின்றாய்?
உன்னைப் போல நானும் பறக்க
உபாயம் சொல்வாயோ?



பூனைக்குட்டி, பூனைக்குட்டி
எப்படிப் பாய்கின்றாய்
காலைத் தூக்கி நானும் பாயக்
கற்றுத் தருவாயோ?

ஆமைத் தம்பி , ஆமைத் தம்பி
எப்படி நீந்துகிறாய்?
நீருக்குள்ளே மூச்சை நிறுத்தும்
நிலையை விளக்காயோ?

சாமியாரே சாமியாரே
எங்கே அலைகின்றீர்?
சாமிப் பெரியோன் உனக்குள் இருப்பதை
காட்டித் தரவோ நான்?

# ஆதிப் பொதுமைவாதி

கதவை ஒருவன் திறத்தல் போல்
காலை வந்து விடிகிறது
கதவை அவன் பின் பூட்டல் போல்
இரவு வந்து கவிகிறது.

பூட்டும் திறப்பும் யார் கையில்?
கதிரோன் என்னும் பெரியவனே
வீட்டுக்காரன், அவன் நாளும்
கதவைத் திறந்து பூட்டுகிறான்

மனிதன் விலங்கு பறவையினம்
எறும்பு பூச்சி ஊர்வனவும்
கதிரோன் வீட்டில் குடியிருப்போர்
கூலி எதுவும் கொடுப்பாரோ?

கூலி இல்லாப் பெரு வீடாம்
கதிரோன் தனையே குடிகளுக்கு
மேலும் வழங்கி சமதர்மம் -
ஆதிப் பொதுமை இயற்றுகிறான்
அவனைப் போற்றி வியப்போமா?

KADDAVELY - NELLIADY
M.P.C.S. Ltd,
KARAVEDDY.

?

# புதிர்

கடைகள் மூடிக் கிடப்பதேன்?
காவல் வண்டி திரிவதேன்?

ஓடும் காரும் பஸ்களும்
ஓட்டம் இன்றி நிற்பதேன்?

தெருவில் சனங்கள் இல்லாமல்
நகரம் செத்துக் கிடப்பதேன்?

விமானம் மேலே பறப்பதேன்?
வேட்டுச் சத்தம் கேட்பதேன்?

கதவை இறுக்கிப் பூட்டி நாம்
வீட்டில் முடங்கிக் கிடப்பதேன்?

நாட்டில் என்ன நடக்குது?
நாமும் விளங்கச் சொல்வீரா?

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY.

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY

பெரியவர்களுக்கான இலக்கியத்தை விட,
சிறுவர்களுக்கென இலக்கியம் படைப்பது மிகவும்
கடினமானதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும்.
எதையும் தம் அறிவின் சேகரிப்புக்குள்
இழுத்துக்கொள்ளும் பருவத்தில் இயங்கும்
சிறுவர்களுக்கு நாம் கொடுப்பது
அவர்களுக்கும் பயன் தரக்கூடியதாகவும்
அவர்களுக்குரிய அறிவின் தளங்களில்
விசாரணை அலைகளை எழுப்பி
இன்னும் அவர்கள் முதிரா உள்ளங்களில்
மண்டிக்கிடக்கும் கலையுணர்வுகளை
கிளர்ந்தெழ வைக்க வைப்பவையாகவும்
இருக்கவேண்டும்.

நாம் இங்கே தரும் கவிதைகள், இப்போதான்
பாத்தியைவிட்டு முளைவிடும் குழந்தைகளுக்கென
எழுதப்படும் ஒத்திசைப்பாடல் - *Nursery Rhymes* -
வகையைச் சார்ந்தவையல்ல.
பாத்தியை விட்டு மேலெழுந்து இன் காற்றில்
தலையசைக்கும் தளிர்களுக்கானவையே இவை.

மு.பொ

மூன்றாவது மனிதன் பதிப்பகம்